

நேற்று (8.8.2025) சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித் துறை கூட்டரங்கில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், எதிர்வரும் வடகிழக்குப் பருவ மழை தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுப்பணித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, முதன்மைத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிவண்ணன், தலைமைக் கட்டடக் கலைஞர் திருமதி இளவெண்மாள், பொதுப்பணித் துறை மண்டல தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள், செயற் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆகியோரிடம் நேற்று (08.08.2025) சென்னை, நந்தனம் அரசு கலை கல்லூரியில், அகில இந்திய அளவில் இருபால் தேசிய மாணவர் படை மாணவர்களிடையே நடைபெற்ற மலையேற்ற பயிற்சி போட்டிகளில் வெள்ளிப் பதக்கங்களை வென்ற நந்தனம் அரசு கலைக் கல்லூரி மாணவி CADET. ச.வைஷ்ணவி அவர்கள் வாழ்த்து பெற்றார்கள். இந்நிகழ்வில் கல்லூரி கல்வி ஆணையர் எ.சுந்தரவல்லி கல்லூரி முதல்வர் (மு.கூ.பொ) முனைவர் வே.புகழேந்தி ஆகியோர் உடனிருந்தனர்.

### 8–ஆம் வகுப்பு வரை கட்டாய தேர்ச்சி முறை!

# நடப்பு கல்வியாண்டு முதல், பிளஸ் 1 தேர்வு ரத்து!

## பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி!

சென்னை, ஆக.9-

தமிழ்நாட்டில் பிளஸ் 1 தேர்வு ரத்து செய்யப்படுவதுடன் நடப்பு ஆண்டிலேயே இது அமலுக்கு வரும் என்றும், 8-ஆம் வகுப்பு வரை கட்டாய தேர்ச்சி முறையே தொடரும் என்றும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையில் தெரிவித்தார்.

தமிழகத்துக்கான மாநில அரசின் கல்விக் கொள்கை (பள்ளிக் கல்வி) அறிக்கையை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.8.2025) காலை வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டியளித்தார்.

மத்திய அரசின் தேசிய கல்விக் கொள்கைக்கு தமிழக அரசு தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில் இதற்கு மாற்றாக மாநிலத்துக்கு என சிறப்பான கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டு இன்று



வெளியிடப்பட்டது

விழாவை தொடர்ந்து தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை குறித்து, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஒன்றிய அரசு தேசிய கல்வி கொள்கை 2020 அறிமுகம் செய்த போதே, அதில் தெரிவிக்கப்பட்ட பல்வேறு அம்சங்கள் பிற்போக்குத்தனமாகவும், ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலும் இல்லை என்று கல்வியாளர்களும், பல்வேறு தரப்பினரும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த ஆண்டு தமிழ்நாடு அரசு நமக்கான மாநிலக் கல்விக் கொள்கையை உருவாக்க ஓய்வு பெற்ற நீதிபதி முருகேசன் தலைமையில் குழு அமைத்தது.

அந்தக் குழு, சமூக சமத்துவத்துக்கான கல்வியை உறுதிபடுத்துவதற்காக தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கையை வடிவமைத்துள்ளது. இந்த கல்விக் கொள்கையில் சம வாய்ப்பு சமூக நீதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகவும், அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு, எதிர்காலத் திறன் மற்றும் டிஜிட்டல் அறிவு, மதிப்பீட்டு சீர்திருத்தங்கள், ஆசிரியர் திறன் மேம்பாடு, பாதுகாப்புடன் கூடிய பள்ளிகள், சமூக ஈடுபாடு மற்றும் நிர்வாகப் பரவலாக் கம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக மாநிலக் கல்விக் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கல்வி கொள்கையானது தமிழ்நாட்டின் நிலையான முன்னேற்றம் வலுவான அடித்தளத்தை உருவாக்கியுள்ளது. வளர்ந்து வரும் சமூகப் பொருளாதார நிலமைகளுக்கு ஏற்ப கல்வி சார்ந்த முன்னெடுப்புகள் இதில் இணைக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள பல்வேறு பிற்போக்கான அம்சங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாமல் ஒன்றாம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரையில் ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களின் கற்றல் அடைவுத் திறனை மதிப்பீடு செய்யும் முறைகள் தமிழ்நாட்டில் தற்போது உள்ளது.

அது அப்படியே தொடரும். அத்துடன் இருமொழிக் கொள்கையும் நீடிக்கும். அனைத்து வகுப்புகளுக்கும் தமிழ் கட்டாயம் என்பது கொண்டு வரப்பட்டுள்ளது. அதனால் மாநில, ஒன்றிய அரசு என அனைத்து வகை பள்ளிகளிலும் தமிழ் மொழி கட்டாயம் நடத்தப்பட வேண்டும். தமிழ் மொழி கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாத பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். அத்துடன் ஒன்றிய அரசு சார்ந்த பள்ளிகளில் இருக்கின்ற ஆசி ரியர்களுக்கு தமிழ்மொழி பயிற்றுவிக்கப்படும்.

புதிய கல்விக் கொள்கை முறையில், தமிழ் மாநில அரசின் பாடத்திட்டத்தின் கீழ் செயல்படும் பள்ளிகளில் 8ஆம் வகுப்பு வரை கட்டாயத் தேர்ச்சி முறை தொடரும்.

இனி, 10 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கு மட்டுமே பொதுத் தேர்வு நடத்தப்படும்.

நடப்பு கல்வியாண்டு முதலே 11ஆம் வகுப்புக்கு பொதுத் தேர்வு ரத்து செய்யப்படுகிறது. 11ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்கள், தங்களை பொதுத் தேர்வுக்கு ஆயத்தப்படுத்தும் ஆண்டாக 11ஆம் வகுப்பை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டியளித்தார்.

### மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும்

# நாகாலாந்து மாநில ஆளுநர் இல.கணேசன் விரைவில் உடல்நலம் பெற்றிட விழைகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஆக.9-

நாகாலாந்து மாநில ஆளுநர் இல. கணேசன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

நாகாலாந்து மாநில ஆளுநர் இல. கணேசன் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் செய்தியறிந்து மிகுந்த கவலை கொள்கிறேன்.

அவர் விரைவில் நலம்பெற்று, மீண்டும் நல்ல உடல்நிலைக்குத் திரும்ப வேண்டும் என்று விழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### பஹல்காம் தீவிரவாதிகள் தாக்குதலில் குண்டடிப்பட்டு,

# முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினின் முயற்சியால் நலம்பெற்ற டாக்டர் ஏ.பரமேஸ்வரன் - குடும்பத்தினர் முதல்வருக்கு நன்றி!

## சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேரில் சந்தித்து தெரிவித்தனர்!



சென்னை, ஆக.9-

பஹல்காம் தீவிரவாதிகள் தாக்குதலில் குண்டடிப்பட்டு, முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முயற்சியால் நலம் பெற்ற டாக்டர் ஏ.பரமேஸ்வரன் மற்றும் அவர் குடும்பத்தினர் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

ஜம்முவின் அனந்த்நாக் மாவட்டத்தில் உள்ள பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22 அன்று நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஏ.பரமேஸ்வரன் அவர்கள் குண்டடிப்பட்டு புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தபோது, “அவரது மருத்துவ மற்றும் பிற செலவுகளை தமிழ்நாடு அரசே ஏற்கும்” என்று முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதிமொழி அளித்து சிகிச்சை பெற்று வந்தார்.

அத்துடன், முதலமைச்சர் அவர்கள், புதுடெல்லி சென்றிருந்த போது, எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த டாக்டர் ஏ.பரமேஸ்வரன் அவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் முயற்சியினால் நடைபெற்ற சிகிச்சையின் காரணமாக நலம் பெற்று இல்லம் திரும்பிய டாக்டர் ஏ.பரமேஸ்வரன் அவர்களும் - அவர் குடும்பத்தாருமான அவரது துணைவியார் டாக்டர் ம.நயன்தாரா, தந்தையார் பி.ஆறுமுகம், மாமனார் டாக்டர் டி.கே.மணிகுமார், மாமியார் டாக்டர் ஜெ.சித்ரா, மாமன் டாக்டர் வேதாந்த சீனிவாசன் ஆகியோர் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களை சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று (08.08.2025) காலை, நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், வி.செந்தில்பாலாஜி, அமைச்சர் தங்கம் தென்னரசு, கழக விவசாய அணிச் செயலாளரும் - டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான ஏ.கே.எஸ்.விஜயன், செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 170 வது நாள்!

## துறைமுகம் தொகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, ஆக. 9 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 170 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (08.08.2025), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 54 அ, பி.கே.ஜி.தெரு, அண்ணா பிள்ளை தெரு. 2) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 56 அ, சாலை விநாயகர் கோயில் தெரு வள்ளுவர் நகர் அருகில், ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும்,தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர். கலைச்செல்வி, P.விஜயகுமார்,



எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப. ஜெகதீஷ் வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ. அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே. கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி. ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே. பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P. விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டன ர்.




ஆகஸ்டு 7 முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு 177வது வார்டில் தலைவரின் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி கழக மாநில தேர்தல் பணிக்குழு செயலாளரும், வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி பெ.மணிமாறன் அவர்கள் 500 பேருக்கு அறுசுவை உணவினை வழங்கினார். இந்நிகழ்வில் க.பத்மராஜன், சி.கன்னியப்பன், ஜி.செல்வராஜ், என். மணிமாறன், டி.மேகநாதன், ஆர்.ராஜேஷ், பி.எஸ்.தனுஷ், இ.கல்யாணி, அ.வேலு, ஜெ.லிவிங்ஸ்டன், எஸ். பெலிக்ஸ், சைக்கிள் பக்தா, சு.சுந்தர், க.மீசை ராஜேந்திரன் உள்ளிட்ட கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.



புதுச்சேரி மண்ணின் மைந்தர்களை படிப்பு மற்றும் வேலைவாய்ப்பில் புறக்கணித்து, பிற மாநிலத்தவர்கள் பயன்பெறும் வகையில் ஜிப்மர் நிர்வாகம் புதுச்சேரி மக்களின் நல்வாழ்வு மற்றும் வேலைவாய்ப்பில் அக்கறை காட்டாமல் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் செயல்படுவதை கண்டித்தும், ஜிப்மர் நிர்வாக வேலை வாய்ப்பளிக்கும் தேர்வை ஜிப்மர் நிர்வாகமே நடத்த நடவடிக்கை எடுக்கவும், தற்போது அறிவித்துள்ள செவிலியர் மற்றும் குரூப் பி & சி பணியிடங்களில் புதுச்சேரி மண்ணின் மைந்தர்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வலியுறுத்தியும் புதுச்சேரி மாநில திமுக சார்பில் மாநில அமைப்பாளர் இரா.சிவா எம்.எல்.ஏ. தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் ஜிப்மர் நுழைவு வாயிலில் நேற்று நடைபெற்றது. இதில் கழக நிர்வாகிகள், தோழர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாநகராட்சியில் 18 வது வட்டத்தில் மாமன்ற உறுப்பினர் திருமதி மல்லிகா ராமகிருஷ்ணன் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி திருவுருவப்படத்திற்கு மாநகர செயலாளர் சி கே வி தமிழ்ச்செல்வன் மாலை அணிவித்து அறுசுவை உணவு வழங்கினார் உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் எம் எஸ் சுகுமார் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் வி எஸ் ராமகிருஷ்ணன். பகுதி செயலாளர் கே.திலகர், தகவல் தொழில்நுட்பணி எஸ்.அரவிந்தகுமார் வட்ட செயலாளர் மண்டி சம்பத். குமரன். உள்ளிட்ட வட்டக் கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.